# இரக்கத்தின் தூது

**முன்னுரை**

பழைய ஏற்பாட்டில் ‘‘உம் மாட்சியை எனக்குக் காட்டும்படி வேண்டுகிறேன்’’ என்று வேண்டிய மோசேவுக்கு (காண். விப 33:19) இறைவன் இறங்கி வந்து மோசேவைக் கடந்து போகையில் ‘‘ஆண்டவர்! ஆண்டவர்! இரக்கமும் பரிவும் உள்ள இறைவன் சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர். ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர்; கொடுமையையும் குற்றத்தையும் பாவத்தையும் மன்னிப்பவர்;’’ (விப 34:6–7) என இறைவனைப் பற்றிய பண்பு நலன்கள் அறிவிக்கப்படுகின்றன. இத்தகைய இரக்கம் நிறைந்த இறைவன் தனது இருத்தலையும், தனது பண்பு நலன்களையும், செயல்பாடுகளையும் மானிடருக்கு அறிவிக்க அவ்வப்போது தூதர்களை தேர்ந்து அனுப்புகின்றார். மீட்பின் வரலாறு அவர்களை ‘இறைவாக்கினர்கள்’ என்றழைக்கின்றது. இத்தகையோர் இரக்கத்தின் தூதுவர்களாய் இருந்து அறிவித்த இரக்கம் பற்றிய இறையியல் செய்திகளைப் பற்றி இவண் சுருக்கமாகக் காண்போம். இறைவாக்கினர்கள் திருவிவிலியத்தில் ‘தம் பெயரில் நூல் பெற்ற இறைவாக்கினர்கள்’ ‘நூல் பெறாத இறைவாக்கினர்கள்’ என பகுக்கப்படுகின்றனர். இக்கட்டுரை இவ்விரு குழுவினரின் கருத்துக்களையும் உள்ளடக்கியதாக அமையும்.

## 1. இறையிரக்கம் இல்லை எனும் அச்சுறுத்தல்

இஸ்ரயேல் மக்களும், அவர்களின் தலைவர்களான அரசர்களும் இறை விருப்பத்திற்கு எதிராகச் செயல்பட்டபோது அவர்களுக்கு இறையிரக்கம் வழங்கப்படமாட்டாது மாறாக தண்டனைத் தீர்ப்பே கிடைக்கும் எனும் அச்சுறுத்தலை இறைவாக்கினர்கள் தந்தனர்.

அரசர் சவுல் சாமுவேலுக்காகக் காத்திருக்காமல் பலி ஒப்புக் கொடுத்த போது இறைவாக்கினர் சாமுவேல் ‘‘உமது அரசு நிலைக்காது. ஆண்டவர் தம் மனதிற்கு ஏற்ப ஒருவரைத் தமக்கெனத் தேடி அவரையே தம் மக்களின் தலைவராய் நியமித்துள்ளார்’’ (1 சாமு 13:14) என அறிவித்தார். அவ்வாறே ஆண்டவரின் கட்டளைப்படி அமலேக்கியரை அழிக்காமல் விட்டபோது, சாமுவேல் இறைவாக்கினர் ‘‘ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருவது எரிபலிகள், பிற பலிகள் செலுத்துவதா? அவரது குரலுக்குக் கீழ்ப்படிவதா? கீழ்ப்படிதல் பலியைவிடச் சிறந்தது.’’ என்று கண்டித்து (1 சாமு 15:22), ‘‘நீர் ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்தீர்! அவரும் உம்மை அரசப் பதவியினின்று நீக்கிவிட்டார்’’ (1 சாமு 15:23) என்று தண்டனையையும் அறிவிக்கின்றார். அரசர் தாவீதும் ஆண்டவரின் வார்த்தையை புறக்கணித்து பாவம் செய்ததால் இறை வாக்கினரான நாத்தான் அவரை கடிந்து அவருக்கான தண்டனையை அளிக்கின்றார் (காண். 2 சாமு 12:10–11). ‘‘நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டேன்’’ (2 சாமு 12:13) என்று தாவீது மனம் வருந்திய போது ‘‘ஆண்டவரும் உனது பாவத்தை நீக்கிவிட்டார். நீ சாகமாட்டாய்’’ (2 சாமு 12:13) என இறை மன்னிப்பையும் அறிவிக்கின்றார். எனவே இறைக் கோபம் அல்லது தண்டனை என்பது பாவியிடமிருந்து மனமாற்றத்தை வெளிக்கொணரும் ஒரு வழிமுறைதான். எனவேதான் எசாயா வழியாக இறைவன் இவ்வாறு கூறுகின்றார்: ‘‘நொடிப்பொழுதே நான் உன்னைக் கைவிட்டேன்; ஆயினும் பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக்கொள்வேன். பொங்கியெழும் சீற்றத்தால் இமைப்பொழுதே என் முகத்தை உனக்கு மறைத்தேன்; ஆயினும் என்றுமுள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டுவேன். . . மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன் மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது; என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது என்கிறார். உனக்கு இரக்கம் காட்டும் ஆண்டவர்’’ (எசா 54:7–8, 10).

## 2. இறைவனின் தன்மை இரக்கம்

பாவங்களுக்கு இறையிரக்கம் இல்லை, தண்டனைதான் உண்டு என்பது எதிர்மறைச் செய்தியாக இருக்க, இறைவாக்கினர்களின் நேர்மறையான செய்திகளில் முதன்மையானது இறைவனின் இறைத்தன்மைகளில் ஒன்று இரக்கம் அல்லது இரக்கம் இறைவனின் பண்பு நலன் என்பதாகும். ஒசேயா நூலில் இறைவன் இவ்வாறு கூறுகின்றார்: ‘‘எப்ராயிமே! நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரயேலே! உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்?. . . என் உள்ளம் அதை வெறுத்து ஒதுக்குகின்றது, என் இரக்கம் பொங்கி வழிகின்றது. என் சீற்றத்தின் கனலைக் கொட்ட மாட்டேன்; எப்ராயிமை அழிக்கத் திரும்பி வரமாட்டேன்; நான் இறைவன், வெறும் மனிதனல்ல; நானே உங்கள்

நடுவிலிருக்கும் தூயவர், ஆதலால், நான் நகர்க்கு எதிராக வரமாட்டேன்" (ஓசே 11:8–9). நம்மில் பலர் கடவுளின் தனித்தன்மையும் ஆற்றலும் அவர் தரும் தண்டனையில் தான் வெளிப்படுகின்றது என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையில் இறைவனின் தனித்தன்மையும் பேராற்றலும் அவர் காட்டும் இரக்கத்தில்தான் அடங்கியுள்ளது. இறைவன் தன் கோபத்தை காட்டும் போது அவர் 'வெறும் மனிதன்' போலச் செயல்படுகின்றார். இறைவனை மனிதரிடமிருந்து பிரித்துக் காட்டுவது, உயர்த்திக் காட்டுவது அவரது "பொங்கி வழியும் இரக்கமாகும்" (ஓசே 11:8). அதிலேதான் அவரது இறைத்தன்மை, திருத்தூய்மை அடங்கியுள்ளது. இந்த ஓசேயாவின் பகுதியைப் பற்றி விளக்கும்போது நமது திருத்தந்தை பிரான்சிஸ், "இரக்கத்தை அடக்குவதைவிட கடவுளுக்கு அவரது கோபத்தை அடக்குவது எளிதானது" எனும் புனித அகுஸ்தினாரின் மேற்கோளை எடுத்துக்காட்டுகின்றார் (காண். இறையிரக்கத்தின் திருமுகம், எண் 21). ஆக, இறைவனின் இயல்புத் தன்மை இரக்கம் என்பது இறைவன் தூதுவர்களான இறைவாக்கினர்களின் முதன்மையான நேர்மறைச் செய்தியாகும்.

### 3. இரக்கத்தின் வெளிப்பாடு மன்னிப்பு

இறைவனின் இயல்புத் தன்மையான இரக்கம் பல விதங்களில் வெளிப்படுகின்றது. அதில் முதன்மையான வழி இறைவன் அளிக்கும் மன்னிப்பில் அடங்கியுள்ளது என்பதும் இரக்கத்தின் தூதுவர்களான இறைவாக்கினர்களின் எண்ணம். எனவே எசாயா இறைவாக்கினர் இவ்வாறு முழங்குகின்றார்: "கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டு விடுவார்களாக; அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும்; அவர் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார். அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும்; ஏனெனில் மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர்" (எசா 55:7). இங்கு மன்னிப்பும் இரக்கமும் இணைந்து வருவது நோக்கத்தக்கது. இதேப்போல மீக்கா இறைவாக்கினரும், "அவர் நம்மீது இரக்கம் காட்டுவார்; நம் தீச்செயல்களை மிதித்துப் போடுவார்; நம் பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்து விடுவார்" (மீக் 7:19) என இறையிரக்கத்தையும் இறை மன்னிப்பையும் இணைத்து பேசுகின்றார்.

### 4. இரக்கச் செயல்களில் ஈடுபடல்

இறைவனின் இரக்கம் அவரது படைப்பு செயல்களிலும் வெளிப்படுகின்றது. அவர் தமது இரக்கத்தால் இவ்வுலகைப் படைத்து, பாதுகாத்து, அதன் தொடர்ச்சியிலும், வளர்ச்சியிலும் அக்கறை உடையவராய் இருக்கின்றார். சுருங்கக்கூறின் ஆண்டவர் வாழ்வு புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என விரும்புகின்றார். இதை தான் மட்டுமல்ல தன் இடத்தில் இருந்து மானிடர் செய்ய வேண்டும் என விரும்புகின்றார். இது தான் படைப்பின் தொடக்கத்தில் இறைவனின் திட்டமாகவும் இருந்தது (காண். தொநூ 1:27–28; 2:5,15). இந்த உயிரும் வாழ்வும் இழந்து அல்லது நலிந்துபோன வறியோரும், ஏழைகளும் இறைவனின் சிறப்பு கவனம் பெறுகின்றனர். இறைவனிடமிருந்து இரக்கத்தைப் பெற்ற மானுடம் இத்தகையோருக்கான இரக்கச் செயல்களில் ஈடுபட வேண்டும் என்பது இறைவனின் எதிர்பார்ப்பு என அவரின் தூதர்களான இறைவாக்கினர்கள் வலியுறுத்தினர். இஸ்ரயேலர் எகிப்தில் அடிமைகளாகவும், அன்னியராகவும் இருந்ததை நினைத்து தம்மிடையே இருக்கும் அன்னியர், விதவை, அனாதை ஆகியோருக்கு இரக்கம் காட்ட, அவர்கள் பால் இரக்கச் செயல்களில் ஈடுபட கட்டளையிடுகின்றார் (காண். விப 22:21–26; இச 5:15; 10:19; 24:22; விப 23:6–8; லேவி 19:11–18; 25). இத்தகையதொரு நோக்குடன்தான் சாபத் சட்டங்களும், யூபிலிச் சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன (காண். விப 20:9; 23:12; இச 5:12–15; விப 23:10 முதல்; இச 15:1–18; லேவி 25:8 முதல்; 27:14 முதல்) அவர்களிடையே வறியவர் இல்லா நிலைவேண்டும் என்பதே இறைவனின் கனவாயிருந்தது (காண். இச 8:9; 15:4). இத்தகு உயர் சமூகம் படைக்க இறைவாக்கினர் முயன்றனர். அதற்கு எதிராயிருந்த ஊழலையும், அநீத முறைமைகளையும், அடக்குமுறை களையும், ஏய்த்து பிழைப்பதையும் எதிர்த்தனர். நூல் பெற்ற இறைவாக்கினர்களுள் காலத்தால் முந்தியவரான ஆமோஸ் நூலில் இது அதிகம் காணக்கிடக்கின்றது (காண். மோசே 2:6–8; 4:1, 7–12; 8:4–7; 6:1–14; 5:21–25), அவரின் அடியொற்றி வந்த பிற இறைவாக்கினர்கள் இதை அதிகம் வலியுறுத்தினர் (காண். எசா 1:11–17; 58:5–7; எசே 18:7–9; ஓசே 4:1–3; 6:6; 8:13; 14:4; மீக் 6:6–6; செக் 7:9 முதல்). எனவே இஸ்ரயேலர் இரக்கம் பெறுபவராக மட்டுமல்ல பிறருக்கு இரக்கம் அளிப்பவராக அதை செயல்படுத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது இறைவாக்கினரின் தூதுச் செய்தியாக இருந்தது.

**முடிவுரை**

இறைவனின் தன்மையையும், எதிர்பார்ப்பையும் மானுடருக்கு அறிவிக்க வந்த தூதுவர்களான இறைவாக்கினர்கள் நீதியின் படி நின்று அவரை கண்டிப்பவராகவும், தண்டிப்பவராகவும் காட்டினாலும் அது தவறிழைத்தோரை மனமாற்றத்திற்கு அழைக்கும் ஒரு வழிமுறையாகவே பார்க்கப்பட வேண்டும். அதையும் தாண்டி அவர்கள் நேர்மறைச் செய்தியாக இறைவனின் இறைத்தன்மை இரக்கம் என்றும், அது அவரின் மன்னிப்புச் செயல்பாட்டில் மிளிர்கின்றது என்றும் வலியுறுத்தினர். இத்தகு இறை இரக்கத்தையும், மன்னிப்பு செயலையும், மீட்புச் செயலையும் கண்டு அனுபவித்த இஸ்ரயேலர் தம்முடன் வாழும் வளம் குன்றியோருக்கு இரக்கம் காட்ட அழைக்கப்படுகின்றனர் எனும் சவாலையும் சட்டமாக வைத்தனர் இறைவாக்கினர். எனவே இரக்கம் என்பது வெறும் உணர்வாக குறுகிவிடாமல் செயல்பாடாக பரிணமிக்க வேண்டும் என்பதே இறைவாக்கினர்கள் விடுக்கும் தூதாகும்.

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**